## தொகுதி மறுவரையறை நிலைப்பாட்டில் ‘பல்டி’ தமிழ்நாட்டில் மட்டும்தானா?

# நச்சுப் பாம்பான காங்கிரசின் உண்மையான நிலைதான் என்ன?

## மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதிமாறன் கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 12–

தொகுதி மறுவரையறையில் இரட்டை வேடம் போடும் நச்சுப் பாம்பான காங்கரசின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன? தொகுதி மறுவரையறை நிலைப்பாட்டில் ‘பல்டி’ தமிழ்நாட்டில் மட்டும் தானா? என மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கழக நாடாளுமன்றத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் அவர்களின் வலைத்தள பதிவு பின்வருமாறு:

**Delimitation: தமிழ்நாட்டில் மட்டும் NoDelimitation நாடகம் ஏன்? தங்கள் Proxy அரசை வைத்து எம்.பி.க்கள் கூட்டம் நடத்தும் காங்கிரஸ், தான் ஆளும் நான்கு மாநிலங்களில் ஏன் அமைதியாக இருக்கிறது? தொகுதி மறுவரையறையை ஆதரித்த ரேவந்த் ரெட்டி அவர்களைக் கேள்வி கேட்கத் துணியுமா?**



**த.வெ.க. அரசைத் தூண்டிவிட்டு, தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாட்டில் எம்.பி.க்கள் கூட்டம் என்று நாடகமொன்றை அரங்கேற்றிய காங்கிரஸ் கட்சியின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன?**

**FairDelimitation என்ற நிலைப்பாட்டிலிருந்து NoDelimitation என்று அடித்திருக்கும் பல்டி தமிழ்நாட்டில் மட்டும் தானா? இல்லை, அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துமா?**

**அப்படியெனில், காங்கிரஸ் ஆளும் நான்கு மாநிலங்களில் இப்படியான எம்.பி.க்கள் கூட்டத்தை ஏன் நடத்தவில்லை?**

**NoDelimitation என்று இங்கு நாடகமிடும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்களில் ஒருவரான ரேவந்த் ரெட்டி அவர்கள், Delimitation நடந்தால் தெலங்கானா மாநிலத்தின் பிரதிநித்துவம் அதிகரிக்கும் என்று பேசியிருப்பது ஏன்?**

**தொகுதி மறுவரையறையில் தெளிவான நிலைப்பாடின்றி இருக்கும் காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் செய்வது PettyPolitics அன்றி வேறல்ல.**

**நச்சுப்பாம்பாக விளங்கும் காங்கிரஸ் கட்சியின் Proxy அரசை நடத்திக் கொண்டிருக்கும் ரீல்ஸ் கட்சியின் ரீல்களை மக்கள் நம்ப மாட்டார்கள்.**

இவ்வாறு தயாநிதி மாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

## த.வெ.க. அரசின் பட்ஜெட்டில் திட்டங்களை தேடிக்கொண்டே இருக்கிறோம்

# திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள்தான் இன்றளவும் மக்கள் மனதில் உள்ளது!

## பேரவையில் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு!

**சென்னை, ஆக. 12 -**

**தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசின் திட்டங்கள்தான் தற்போதும் நடைமுறையில் இருப்பதாக தி.மு.க. எம்.எல்.ஏ. ஓ.பன்னீர்செல்வம், பெருமிதம் தெரிவித்துள்ளார். த.வெ.க. அரசின் திட்டங்களை தேடுகிறேன், தேடுகிறேன் தேடிக்கொண்டே இருக்கிறேன் என்றும் விமர்சித்துள்ளார்.**



தமிழ்நாடு சட்டப்பேரவையில் த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கை மீது 3வது நாளாக நடந்த விவாதத்தில் பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஓ.பன்னீர்செல்வம், தேர்தல் வாக்குறுதிகளை மறந்து நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். நிதிநிலை அறிக்கையில் பெயர் மாற்றம் மட்டுமே உள்ளது என்றும் விமர்சித்தார். மக்கள் மனதில் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் மட்டுமல்ல, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினும் நிறைந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

புதிய அறிவிப்புகள் வரும் என எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருப்பதாக குற்றம் சாட்டிய ஓ.பன்னீர்செல்வம், த.வெ.க. அரசின் திட்டங்களை தேடினேன், தேடினேன், தேடிக்கொண்டே இருக்கிறேன் என்றும் விமர்சித்தார்

தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுக்காமல் ஆட்சி நடத்தியவர் தி.மு.க. தலைவர் தமிழ்நாட்டின் உரிமைக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் த.வெ.க. ஆட்சியால் ஏமாந்துபோன பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள்

த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுக்காமல் ஆட்சி நடத்திய தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டின் உரிமைக்காக தொடர்ந்து இன்றளவும் போராடிக் கொண்டிருக்கிறார்.

த.வெ.க. ஆட்சியால் ஏமாந்து போன பெண்கள், இளைஞர்கள், விவ சாயிகள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் புலம்பி கொண்டிருப்பதோடு , த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிகளும் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

முந்தைய ஆட்சிகளில், காவிரி பிரச்சினையில் சட்டரீதியாகவே தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியதை சுட்டிக்காட்டிய ஓ.பன்னீர்செல்வம், காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை என்பது தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுப்பதாகும். காவிரியை தொடர்ந்து முல்லைப்பெரியாறு நீர்ப்பங்கீட்டிலும் தற்போது பிரச்சினை எழுந்திருக்கிறது . காவிரி விவகாரத்தில், கர்நாடக அரசின் கருத்தை த.வெ.க. அரசு வலுப்படுத்துகிறதா?‘

இவ்வாறு ஓ.பன்னீர் செல்வம் பேசினார்.

---

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

எதிராக டெல்லியில் நடந்த மாணவர்கள் போராட்டத்திற்கு த.வெ.க. ஏன் ஆதரவு தெரிவிக்கவில்லை? உயர் கல்வியில் நீட் உட்பட எந்த நுழைவுத்தேர்வும் இருக்கக்கூடாது என்பதே திமுகவின் நிலைப்பாடு என முத்துராஜா எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இதனையடுத்து தி.மு.க., அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்யக்கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சு அவைக்குறிப்பிலிருந்து நீக்கம்:**

சட்டப்பேரவையில் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து, த.வெ.க. உறுப்பினர் பேச்சை அவைக்குறிப்பில் இருந்து சபாநாயகர் நீக்கினார். சட்டப்பேரவையில் த.வெ.க. உறுப்பினர் கண்ணியமாக பேச வேண்டும் என்று சபாநாயகர் கண்டித்தார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் குறித்து த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமார் அவதூறாக பேசியதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்.

திராவிட மாடல் ஆட்சியில் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்களை தினமும் தொடர்பு கொண்டு மக்கள் பிரச்சனைகளை தீர்த்துவைக்குமாறு அறிவுறுத்தினார் என்றும், தி.மு.க. ஆட்சியில் ஓய்வு இல்லாமல் அமைச்சர்கள் உழைத்தார்கள் என்றும் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு திமுக கொறடா எ.வ.வேலுவும் கண்டனம் தெரிவித்தார்..

சட்டப்பேரவையில் த.வெ.க. எம்.எல்.ஏ. சுகுமாரின் பேச்சுக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து, த.வெ.க. உறுப்பினர் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவதாக சபாநாயகர் அறிவித்தார். சட்டப்பேரவையில் த.வெ.க. உறுப்பினர் கண்ணியமாக பேச வேண்டும் என்றும் சபாநாயகர் அறிவுறுத்தினார்.

---

## கழக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில்

# நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவே இல்லையா?

## பேரவையில் அமைச்சருக்கு அர.சக்கரபாணி ஆதாரத்துடன் பதிலடி!

**சென்னை, ஆக. 12 -**

**“கழக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவே இல்லையா?” என்று பேரவையில் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி அறநிலையத்துறை அமைச்சருக்கு ஆதாரத்துடன் பதிலடி கொடுத்தார்.**

**அமைச்சர் அர. சக்கரபாணி:** இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், சென்ற ஆட்சியிலே நெல் சேமிப்புக் கிடங்கு எங்கும் கட்டவில்லையென்று ஒரு தவறான தகவலைச் சபையிலே பதிவு செய்தார். நான் அவருக்குச் சொல்லிக்கொள்வது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், அன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் ஒரு நெல்மணிகூட மழையில் நனையக்கூடாது என்பதை உணர்ந்து அவர் பலமுறை சொல்லியிருக்கிறார். ஒருமுறை தொலைக்காட்சியிலே நெல் மூட்டைகளெல்லாம் நனைவதைப் பார்த்துவிட்டு, என்னையும், அன்றைக்கு வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் உடனே இல்லத்திற்கு வரச்சொல்லி இனிமேல் தமிழ்நாட்டிலே எங்கும் நெல்மணிகள் மழையில் நனையக்கூடாது. நாளைக்கு தலைமைச் செயலாளர் அவர்களை அழைத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு ஆய்வுக் கூட்டத்தை நடத்துங்கள் என்று சொல்லி, அதன் அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபின்பு, 18 மாவட்டங்களில் சுமார் 54 இடங்களில் 7.33 இலட்சம் மெட்ரிக்டன் சுமார் 383 நவீன சேமிப்புத்தளங்கள் சுமார் 825 கோடியே 79 இலட்சம் ரூபாயில் அமைக்கப்பட்டு,

அதில் ரூ.331 கோடி அளவில் 4.03 இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட 253 சேமிப்புத்தளங்கள் அன்றைய முதலமைச்சர் அவர்களால் திறந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. அதோடு மீதமுள்ள 3.30 இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட 130 சேமிப்புத் தளங்கள் சுமார் 494 கோடியே 71 இலட்சம் ரூபாயில் இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அது விரைவிலே முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவிருக்கிறார்கள்.



எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நெல் சேமிப்புத்தளங்கள் நிறைய கட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக நீங்கள் தஞ்சாவூருக்கு செல்லுங்கள். நடுவூர் என்ற இடத்தில் ஒரு இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட பெரிய சேமிப்புக் கிடங்கு, ஒரு இலட்சம் மெட்ரிக்டன் அளவில் நெல்லை சேமித்து வைப்பதற்காக சேமிப்பு கிடங்கு கட்டப்பட்டுள்ளது. பல இடங்களில் டெல்டா மாவட்டமாக இருந்தாலும் சரி, டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நெல் சேமிப்புத்தளங்கள் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த வேளாண்மை உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் சுமார் ரூ.394 கோடியில் நெல் சேமிப்புத்தளங்கள் கட்டப்படும், அதற்காக நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேளாண்மை உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையை கடந்த ஆண்டில் அதைப் பார்க்கவேண்டுமென்று இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு!**

**அர. சக்கரபாணி:** உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், அதாவது நேரடி கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அந்தந்த கட்சிக்காரர்கள் திறக்கிறார்கள் என்று தவறான தகவலை சொல்கிறார்கள். கடந்த ஆட்சியில் ஒரு நெல் நேரடி கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு குழு, மாவட்ட ஆட்சித் தலைவர், (விவசாயம்), (கூட்டுறவு) மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர் சங்கத்தினுடைய இணைப் பதிவாளர், வேளாண்மை இணை இயக்குநர், 2 விவசாய சங்கப் பிரதிநிதி, தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் RM அல்லது SRM என 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள், விவசாயிகள், எங்கெங்கு நேரடி கொள்முதல் நிலையம் வேண்டுமென்று நேரடி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கேட்கிறார்களோ அங்கெங்கெல்லாம் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறந்தோம்.

அது 2024-25ல் 4 ஆயிரம் இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1972லிருந்து தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 4 ஆயிரம் இடத்தில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது 2024 -25ல்தான். அரிசி கருப்பாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, இந்திய உணவுக் கழகம் என்ன சொல்லி இருந்தார்கள் என்றால், ஒரு உத்தரவை பிறப்பித்திருந்தார்கள்.

**மக்கள் மகிழும் வண்ணம் அரிசி வழங்கினோம்!**

அனைத்து அரசு ஆலைகளிலும் கலர் சார்டர் இயந்திரங்கள் பொருத்தப் படும் என்று ஆணை பிறப்பித்தி ருந்தார்கள். ஆனால், கடந்த காலத்தில் அது செயல்படுத்தப்படவில்லை; தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன், முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள், மக்களுக்கு. தரமான அரிசி தரவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். எனவே, கடந்தகாலத்தில் 376 ஆலைகள் மட்டுமே இருந்தன. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 623 அரிசி ஆலைகள் எண்ணிக்கையை உயர்த்தி, அனைத்து ஆலைகளிலும் 30 இலட்சம், 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கலர் சார்டர் இயந்திரங்களைப் பொருத்தி, மக்களுக்கு பழுப்பு, கருப்பு இல்லாத அரிசி கடந்த மே மாதம் வரை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டிலிருக்கின்ற 38,000 நியாய விலைக் கடைகளிலும், அரிசி தரமாக இல்லையென்று எங்கும் மக்களிடமிருந்து புகார் வரவில்லை, மக்கள் மகிழும் வண்ணம்தான் நாங்கள் அரிசி வழங்கினோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**கூலி உயர்வு வழங்கப்பட்டது!**

அதேபோன்று, தவறு நடப்பதாக தெரிவித்தார்கள்; அதற்கு எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 2021 டிசம்பர் 31 ஆம் தேதியன்று தஞ்சையில் நடைபெற்ற அரசு விழாவில் என்ன சொன்னார் என்றால், விவசாயிகள் நெல் வாங்கும் இடங்களில் எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக, அங்கு பணி புரிகின்ற ஏழை தொழிலாளர் பெருமக்களுக்கு, மூட்டைக்கு 3.25 ரூபாய்தான் கூலி கொடுக்கப்பட்டதிலிருந்து, 10 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர்களுக்கு சம்பளத்தினை உயர்த்திக் கொடுத்தார்கள். பட்டியல் எழுத்தர்களுக்கு தினப்படி ரூ.120/ம், உதவுபவர்களுக்கு ரூ.100/ம், காவலர்களுக்கு ரூ.80/ என்றவகையில் உயர்த்திக் கொடுத்து, ஆண்டிற்கு 83 கோடி ரூபாய் அதிகம் செலவானாலும் பரவாயில்லை, எந்தத் தவறும் நிகழ்ந்துவிடக் கூடாது என்று எண்ணி, இவையனைத்தையும் உயர்த்திக் கொடுத்தார்கள்.

இவ்வாறு அர.சக்கரபாணி அவர்கள் பேசினார்.